செ.வெ.எண்: 67 நாள்:25.02.2017

# தமிழ்நாடு முழுவதும் 690 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படவுள்ளது - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை நகர்மன்றத்தில் மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் 69வது பிறந்தநாளினை முன்னிட்டு புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் சார்பில் மாபெரும் மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் மற்றும் சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் திரு.பி.ஆர்.செந்தில்நாதன் அவர்கள் ஆகியோர் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (25.02.2017) துவக்கி வைத்தார்.

இம்மருத்துவ முகாமினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் 69வது பிறந்தநாளினை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையின் சார்பில் 690 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள புதுக்கோட்டை நகர்மன்றத்தில் சிறப்பு மருத்துவ முகாம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு மருத்துவ முகாம் இன்று (25.02.2017) மற்றும் 26.02.2017 ஆகிய இரண்டு தினங்கள் நடைபெறவுள்ளது. இந்த சிறப்பு மருத்துவ முகாமில் பொது மருத்துவ பரிசோதனை, இருதய சிறப்பு பரிசோதனை, இரத்த பரிசோதனை, கல்லீரல் மற்றும் குடலியல் பரிசோதனை, மூட்டுவலி மற்றும் எலும்பு முறிவு சிகிச்சை, சர்க்கரை அளவு கண்டறிதல், கண் சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை சிகிச்சை, சிறுநீரக சிகிச்சை, இருதய நோய் சிகிச்சை, குழந்தைகள் நல சிகிச்சை உள்ளிட்ட அனைத்து வகையான மருத்துவ பரிசோதனைகளும் மற்றும் ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளது. மேலும் பரிசோதனைகளில் தீவிர நோய் தொற்று கண்டறியப்பட்டால் மேல் சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்கு பரிந்துரை செய்யப்படவுள்ளது.

மேலும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 3 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.30000 என மொத்தம் ரூ.90000 மதிப்பில் காதொலிக்கருவிகளும், 6 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.200 என மொத்தம் ரூ.1200 மதிப்பில் கறுப்புக்கண்ணாடி மற்றும் மடக்கு ஊன்றுகோல்களும், 3 மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய மாற்றுத்திறனாளி அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இராணியார் அரசு மகப்பேறு மருத்துவமனையில் பிரசவிக்கும் தாய்மார்களை அவர்களுடைய இல்லத்திற்கு கட்டணமில்லாமல் நேரடியாக அழைத்துச்செல்லும் வகையில் தமிழ்நாடு சுகாதாரத்திட்டத்தின் கீழ் தாய் சேய் ஊர்தி புதுக்கோட்டை ரெட்கிராஸ் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழகஅரசு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையின் சார்பில் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீடு, அம்மா குழந்தைகள் நல பரிசுப்பெட்டகம், டாக்டர்.முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித்திட்டம், பேருந்து நிலையங்களில் பாலூட்டும் தாய்மார்களுக்கு தனிஅறை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. எனவே பொதுமக்கள் இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் மற்றும் மருத்துவ முகாம்களை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் (பொ) மரு.ஷேக்தாவூத், இணை இயக்குநர் (பொது சுகாதாரம் மற்றும் ஊரகநலப்பணிகள்) மரு.ஷம்சாத்பேகம், துணை இயக்குநர் மரு.பரணீதரன் (புதுக்கோட்டை), மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் திரு.இரா.இராஜசேகரன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சரவணக்குமார், முன்னாள் மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.வி.சி.ராமையா, முன்னாள் நகர்மன்ற துணைத்தலைவர் திரு.எஸ்.ஏ.எஸ்.சேட் என்ற அப்துல் ரகுமான், முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் திரு.பாஸ்கர், மருத்துவர்கள், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.